දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ්අඩවිය ) www.health.gov.lk
இஜ ணயத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

මගේ අංකය )
எனது இல )
My No. )CF/EXB/01/2021

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )2021/03/04
திகதி )
Date )

பொது சுற்றுநிருபக் கடித இலக்கம் : 02 - 17/2021

மாகாண சுகாதார செயலாளர்கள்,

பிரதிப் பணிப்பாளர் நாயகம் இலங்கை தேசிய வைத்தியசாலை

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

மத்திய அமைச்சின் கீழ் வரும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,

பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

உரிய நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்,

**சுகாதார அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு - 2 சேவைத் தொகுதியின் (MN - 1 - 2006 (அ)) சம்பள அளவுக்கு உரித்தான பதவிகளுக்கான இரண்டாவது வினைத்திறன் தடைப்பரீட்சை – 2021 (முதலாவது தடவை)**

சுகாதார அமைச்சின் முகாமைத்துவஉதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு - 2 சேவைத் தொகுதியின் (MN - 1 - 2006 (A)) சம்பள அளவுக்கு உரித்தான பதவிகளில் தரம் II ற்கு பதவியுயர்வு பெற்று 03 வருடத்திற்குள் சித்தியடைய வேண்டிய இரண்டாவது வினைத்திறன் தடைப்பரீட்சை சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் **2021/05/02** ம் திகதி நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் நிலையம் மற்றும் நேர அட்டவணை என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறித்து அனுப்பிவைக்கப்படும்.

02. **தகைமைகள் :-**

சுகாதார அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு - 02 சேவைத் தொகுதி (MN - 1 - 2006 (A)) சம்பள அளவுக்கு உரித்தான பதவி ஒன்றில் தரம் II இற்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்கள் (விடுதிக் காப்பாளர் ஆண் /விடுதிக் காப்பாளர் (பெண்), சரக்கு மேடைகள் அலுவலர், உணவு மேற்பார்வையாளர் (பெண்), வரவேற்பாளர், வாட்டுஎழுதுநர், பிரதான அமைப்பு உத்தியோகத்தர், கால்நடை தடுப்பூசி ஏற்றும் வெளிக்கள உதவியாளர், மருந்து விநியோக உதவியாளர்களும், இதுவரை இப் பரீட்சையில் சித்தியடையாத உத்தியோகத்தர்களும் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

கவனிக்கவும்: **2021/04/09 .ம் திகதியன்று IIம் வகுப்பிற்கு நியமக்கப்பட்டு உரிய நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும்.**

03. **வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சையிலிருந்து விடுவித்தல்**

சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் 02-90/2015 (ii) பொது சுற்று நிருப கடித இலக்கமுடையதும், 2015.12.23ம் திகதிய சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைய இரண்டாவது வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சையில் இருந்து விடுவிப்புச் செய்யப்படக் கூடிய உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க தேவையில்லை. (உரிய சுற்றரிக்கையின் சிங்கள, தமிழ் மொழி மூல பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன



385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385,வணக்கத்துக்குரியபத்தேகமவிமலவங்சதேரோமாவத்தை,கொழும்பு 10.
385, Rev. BaddegamaWimalawansaTheroMawatha, Colombo 10, Sri Lanka.

04. விண்ணப்பங்கள் :-

இச்சுற்றறிக்கையின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் நிறுவனத்தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சை),"சுவசிரிபாய", 385,வண.பத்தேகமவிமலவங்சதேரர் மாவத்தை,கொழும்பு - 10 எனும் முகவரிக்கு **2021/04/09** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைகக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்திலும் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என பிரிவுத்தலைவரினால் சான்றுபடுத்தப்பட வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முவரியிடப்பட்ட ரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறைகள் இரண்டினையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையானவிபரங்களும், இரண்டாவதுபக்கத்தில் 05 - 09 வரையானவிபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

05. பரீட்சைக் கட்டணம்

1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

11 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

06. பரீட்சையின் பொருட்டு உட்படுத்திக் கொள்ளுதல்

1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டுபரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

- (அ) தேசிய அடையாள அட்டை
- (ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை
- (இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்
- (ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

07. பரீட்சை நடைமுறை

இந்தப்பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் அதாவது கணனிப் பரீட்சை மற்றும் விடய அறிவு என்பதாகும். ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 1½ மணித்தியாலங்கள் வழங்கப்படும். வினாத்தாள் ஒன்றுக்கான மொத்தப் புள்ளி 100 ஆகும். சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

08. பரீட்சை பாடத்திட்டம்

08.1. கணனிப் பரீட்சை

வினாக்களைக் கொண்டுள்ளது.

அவற்றில் முதலாவது வினா கட்டாயாம் விடையளிக்கப்பட வேண்டிய பல்தேர்வு வினாவாகும். ஏனைய 07 வினாக்களும் கட்டுரை வினாக்களாகும். இவற்றில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்..

கீழே குறிப்பிட்டுள்ள இயலுமைகள் விண்ணப்பதாரிகளிடம் உள்ளதா என பரீட்சிப்பது இப்பரீட்சையின் நோக்கமாகும்.

தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை எண்ணக்கரு

அ) கணனி ஒன்றின் அடிப்படை பகுதிகள் மற்றும் அவறடறின் முக்கியத்துவம்

ஆ) வன்பொருள், மென்பொருள்

i. கணனி முறைமை மென்பொருள் (உ + ம்) இயக்க முறைமை (Operation System)

ii. பிரயோக மென்பொருள

**இதன் கீழ் எதிர்பார்க்கப்படும் அறிவாற்றல் மற்றும் திறன்**

அ) கணனி ஒன்றை சரியான முறையில் இயங்கச் செய்தல் மற்றும் இயக்கத்தை நிறுத்தல்

ஆ) இறுவெட்டு (CD) ஒன்றில் கணனி விபரப்புத்தகம், கணனி கோப்புகள், ஆவணங்கள் என்பவற்றை உள்ளடக்கும் வழிமுறை

இ) புதிய விபரப்பட்டியலை உருவாக்குதல், விபரப் பட்டியல் ஒன்றில் புதிய கோப்பு ஒன்றை உருவாக்கல், அழித்தல், பிரதிபண்ணல், கோப்பு ஒன்றின் பிரதியை விபரப்பட்டியல் ஒன்றில் சேர்த்தல், நகர்த்தல், மீளப்பெயரிடல்

ஈ) விபரப் பட்டியல் ஒன்றிலுள்ள கோவைகளின் எண்ணிக்கை, கோவை ஒன்றின் அளவு, கோவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு தேவையான மென்பொருள், அவற்றை ஆரம்பிப்பதற்கான நாளது வளரப்படுத்துவதற்கான தகவல்களைத் தேடல்.

உ) வடிவமைப்பு (மென்பொருள் ஒன்றை மீண்டும் உருவாக்குதல்)

08.2 விடய அறிவு -

இந்த வினாத்தாள் பதவிக்குரிய கடமைகள் தொடர்பில் விடயத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்களிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

நேரம் 01 ½ மணித்தியாலம்

இவ்வினாத்தாள் 08 வினாக்களைக் கொண்டுள்ளது. இதில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். முதலாவது வினாவானது கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டிய 10 பல்தேர்வுவி னாக்களைக்கொண்ட வினாவாகும். ஏனைய 07 வினாக்களும் கட்டுரை வினாக்களாகும். இவற்றில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

09. பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல் ,இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்திமீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இச்சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை உமது பிரிவு / விஷேட இயக்கங்கள் / நிறுவனத்தில் உள்ள சகல சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு - 02 சேவைத் தொகுதி (MN - 1 - 2006 (A)) சம்பள அளவுத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ள பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட சகல அலுவலர்களுக்கும் தெியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவும். (இந்த விபரங்களை www.health.gov.lk எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.)

கவனிக்கவும் : **சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்று நிருபங்களிடையே ஏதாவது ஒவ்வாமை காணப்படுமாயின் சிங்கள மொழியிலான சுற்று நிருபமே வலுவுள்ளதாகும்.**

**U.A.S. Harshapriya Sisira Kumara**
Deputy Director General (Administration) 02
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10

ஒப்பமிட்டவர்
யு ஏ எஸ் எச் சிசிர குமார
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்)II
செயலாளருக்காக.
சுகாதார அமைச்சு

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|
| |

EXB

மாதிரி விண்ணப்பப் படிவம்

**சுகாதார அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு - 2 சேவைத் தொகுதியின் (MN - 1 – 2006) (அ) சம்பள அளவுக்கு உரித்தான பதவிகளுக்கான இரண்டாவது வினைத்திறன் தடைப்பரீட்சை – 2021 (முதலாவது தடவை)**

**01.** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்எழுதவும்) : ........................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் பெயர் (முதல் எழுத்துக்களை பின்னால் இட்டு ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் : தமிழில்: ........................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி : ........................................................................

(ii) தரம் II ற்கு பதவி உயர்த்தப்பட்ட / உள்ளீர்ப்பு செய்யப்பட்ட கடித இலக்கமும் திகதியும் ........................................................................

(iii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : ........................................................................

(iv) தொலைபேசி இலக்கம் | | | | | | | | | | |

(v) தேசிய அடையாள அட்டை இல | | | | | | | | | | | | |

**02.** இவ்வருடம் தோற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள விடயத்திற்கு எதிரேயுள்ள கூண்டில் ( √ ) என்னும் அடையாளம் இடுக.

கணனிப் பரீட்சை ☐ விடயம் தொடர்பானது ☐

**03.** (அ) தற்போது சேவைபுரியும் நிலையம் ( தமிழில்) ........................................................................

(ஆங்கிலத்தில்) ........................................................................

(ஆ) அதற்குரிய மாவட்டம் ........................................................................

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசின் கீழா : ☐

அல்லது மாகாண சபையின் கீழா : ☐

(ஈ) மாகாண சபையாயின் உரிய மாகாணம் ........................................................................

(உ) அதற்குரிய மாவட்டம் : ........................................................................

(ஊ) பரீட்சை அனுமதி அட்டையினை அனுப்புவதன் பொருட்டு பிழையின்றி தெளிவாக தங்களுடைய முகவரி எழுதப்பட்ட 9" X 4" அளவுடைய, ரூபா 45.00 பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட கடித உறைகள் 3 விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா? ........................................................................

(எ) (i) தபால் முகவரி (தமிழில்) ........................................................................

........................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்) ........................................................................

........................................................................

**04.** பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ........................................................................

**05.** (அ) இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீரா? ..........................................................

(ஆ) முதற் தடவையில்லையெனில் முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ................................................

| முத்திரைக் கூண்டு |
|---|
| |

**06.** **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா................ பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார திணைக்களத்தினால் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி : .............................

.........................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

**07.** **தனிநபர் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி.............................................

..............................................................

கையொப்பமும், திகதியும்.

**08** **நிறுவனத் தலைவரின் சான்றுரை**

திரு / திருமதி / செல்வி .................................................................................................. இந்த நிறவனத்தில் ....................................................................... அலுவலராக பணியாற்றுகின்றார் என்றும் விண்ணபத்தில் அவரினால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானது என்றும், அவர் இப்பரீட்சைக்கு முதற்தடவையான தோற்றுகின்றார் என்றும் அவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடையவர் என்றும் விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள விடயங்கள் விண்ணப்பதாரரின் சுயவிபரக் கோவையிலுள்ள விபரங்களுக்கு அமைய சரியானது என்றும் , என்முன்னிலையில் அவருடைய கையொப்பத்தை இட்டார் என்றும், சான்றுபடுத்துகின்றேன்.

திகதி: .............................................

..........................................................................

நிறுவனத் தலைவரின் ஒப்பம்
(இறபர் முத்திரை இடப்பட வேண்டும்)

**09** **பன்முகப்படுத்தப்பட்ட /விசேட பிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் .............................................. என்பவர் எனது பிரிவில் / விசேட பிரிவில் .................................................................. உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்னும், விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்தி செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ................................

................................................

பன்முகப்படுத்தப்பட்ட பூகுதி /விசேட
பிரிவு தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

**(தேவையற்றனவற்றைக் கீறிவிடவும்.)**